முரசொலி

மு. கருணாநிதி

ஒலி 2

முரசு 1 | சென்னை | 14—5—54 | வெள்ளி | ஒலி 2

புருக்கூடு—புதிய கதை!

புரு வளர்க்கும் ஒருவன், புருக்கூட்டிலே கோழிக் குஞ்சுகளையும் கொண்டுவந்து அடைத்தான். புருக்களுக்கும் கோழிக் குஞ்சுகட்கும் போராட்டம் ஓயவே இல்லை. ஒரு நாள் புருக்கள் எல்லாம், வளர்ப்போனிடம் சென்று தங்களைத் தனியிடத்தில் வைக்குமாறு முறையிட்டன. இல்லையேல் கோழிக்குஞ்சுகளை இருக்குமிடம் தெரியாமல் செய்துவிடுவோம் என்றும் எச்சரித்தன. அப்போது வளர்ப்போன் சொன்னான்; தனியிடமாவது—மண்ணாங்கட்டியாவது — புத்தியற்ற புருக்களே! உங்களுக்கேன் பேதஉணர்ச்சி?—புருக்கூடு என்றால் கோழிக் குஞ்சுகளுக்கும் சேர்த்துத்தானே" என்று! பொறுமை யிழந்த புருக்கள் கூடி யோசித்தன. இவனே நம்மை விற்று வியாபாரம் செய்பவன்; நம்மை வியாபாரப் பொருளாகக் கருதுவதை கூட நாம் பொறுத்துக் கொள்ளலாம் — விவேகமற்றவர்களாகவுமல்லவா கருதுகிறான் வீணன்— கோழிக் குஞ்சுக்கும் சேர்த்துத்தான் புருக்கூடாம்—என்ன முட்டாள் தனமான வாதம்—இனி இவனிடம் நாம் அடிமையாயிருக்கக்கூடாது—என்று தீர்மானித்தன. அதன் விளைவாக, மாலை நேரத்திலேபுருக்கூடு மூடப்படும்போது புருக்கள் மட்டுமே தங்கள் கூட்டுக்கு வந்தன. ஒரு கோழிக் குஞ்சுகூட மேய்ச்சலில் இருந்து திரும்பிவரவில்லை. புருக்கள் செய்த புரட்சியைக்கண்டு வளர்ப்போன் ஆத்திரமடைந்தான். அவைகளை ஒருநாள் முழுதும் கூட்டுக்குள்ளேயேபட்டினி போட்டான். மறுநாள் திறந்து விட்டான். மாலையில் புருக் கூட்டை மூடுவதற்குகாத்திருந்தான். புருக்கள்திரும்பிவரவில்லை. அண்ணாந்து பார்த்தான் கவலையோடு. அவைகள் விடுதலைக் கொடி பறக்கவிட்டபடியே வானத்திலே வட்டமிட்டுப் பறந்து சென்றன.

இப்படி ஒரு கதை நடந்ததாகச் சொன்னால் யாராலும் நம்ப முடியாதுதான். கோழியையும் புருவையும் ஒன்றாகப்போட்டு அடைத்தான்; கோபித்துக் கொண்ட புருக்களிடம், "புருக்கூடு என்பது கோழிக்கும் சேர்த்துத்தான்"என்று விளக்கமுரைத்தான் என்ற நிகழ்ச்சிகண்டிப்பாக நடந்திருக்க முடியாது—கற்பனைக்கும் பொருத்தமற்றது. பாலர் பாடமாக வைக்கவும் தகுதியற்ற விஷயம். ஆனால் இந்த விபரீதக் கதையிலே புருக்கூடு பற்றிய விளக்க முரைக்கிறானே; அவனைவிடக் கொஞ்சமும் குறைந்தவரல்ல நமது கனம் பக்தவச்சலம். பாலர் பாடத்துக்கும் தகுதியற்ற விளக்கத்தைபக்தவத்சலம் —மன்னிக்க வேண்டும்—மந்திரி பக்தவத்சலம் எடுத்துரைக்கிறார். எடுத்துரைப்பது ஈசனார் திருச்சபையல்ல;

இளிச்சவாயர்கள் அதிகமிருப்பார்கள்—எதுவும் அவர் கூறலாம் என்பதற்கு! பேசிய இடமோ— இளிச்சவாயர்கள் தேவைப்படும் அளவுக்கு இருந்தாலும், எழுச்சி மிக்கோரும் அமர்ந்திருக்கும் இடம். அங்கேதான் அவரது பழைய பல்லவியை புதிய மெட்டில் பாடியிருக்கிறார்.

"வட நாட்டாரை தென்னகத்தின் தொழில் நிலையங்களில் கொண்டுவந்து குவிப்பதேன்?" என்ற கருத்தமைந்த கேள்வியை தோழர் கோவிந்தசாமி அவர்கள் கேட்கும்போது, கனம் பக்தவத்சலம் கூறுகிறார்; தமிழர்களும் நிறையப் பேர் வடநாட்டில் வேலை செய்கிறார்கள் என்று! வட நாட்டில் வேலை செய்யும் தமிழர்கள் வாழ்வு எத்தகையது—தென்னாட்டில் வந்து புகுந்த வடவரின் வாழ்வு எப்படி அமைந்துள்ளது என்பதை நெய்வேலி நிலக்கரிச் சுரங்கமே நமக்கு எடுத்துக் காட்டுகிறது. ஒரே வேலையைச் செய்யும் திராவிடனுக்கு பதினான்கு அணாக்களும்—அதே வேலையைச் செய்யும் வட நாட்டானுக்கு மூன்று ரூபாயும் ஒரு நாளைக்குக் கூலியாகத் தரப்படுகிறது என்ற அநியாயத்தைப் பல முறை எடுத்துச் சொல்லியும் கூட பக்தவத்சலங்கள் பேசுகிறார்கள் வடக்கேநம்மவர் சென்று வேலை செய்கிறார் என்று! வட நாட்டானுக்கு அதிகக் கூலி தருவதற்கு காரணம் அவனுக்கு சப்பாத்தி சாப்பாடு அதனால்தான்—என்று பசப்புகிற நிலைமையிலே உள்ள பக்தவத்சலங்களைப் பார்த்து நாடு கேட்கிறது; தென்னாட்டான் வடக்கே வேலை செய்கிறானே; அவனுக்கு அங்கு அரிசி கிடைப்பது கஷ்டமாயிற்றே — அதனால் அவனுக்கு அதிகக் கூலி தரப்படுகிறதாஎன்று! இதற்கெல்லாம் பக்தவத்சலங்களால் பதில் சொல்ல முடியாது. விளக்கமுரைப்பார்கள் புரு வளர்ப்பவனைப்போல! புரு வளர்த்தவன் கதையை நம்மால் நம்ப முடியவில்லை. ஆனால் அதே கதையை தமது முரணான பேச்சின் மூலம் நமக்கு நினைவூட்டுகிறார். தோற்றுப்போய் "லேசா"க மாறி— இப்போது "கன"மாகிக் கதைக்கும் தோழர் பக்தவத்சலம்.

"இந்த ராஜ்யத்திலேயே இன்னும் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிக்கப்படாமல் இருக்கும் போது, வடநாட்டு அகதிகளை இங்கேன் வேலைக்கு அமர்த்த வேண்டும்"

இப்படி ஒரு கேள்வி சட்டசபையில்கேட்கப்பட்டிருக்கிறது திராவிடநாடு பிரிவினை வேண்டும் என்று முழங்கிடும் தோழர் கோவிந்தசாமியோ மற்றவர்களோ அல்ல இந்தக் கேள்வியை எழுப்பியது. திராவிடநாடு என்பது பொருத்தமற்ற கூற்று என்று மேடைகளிலும், ஏடுகளிலும் சொல்லிவரும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் கல்யாண சுந்தரம் அவர்கள்தான், வடநாட்டாரைக் கொண்டுவந்து வேலைகளில் திணிக்கும் சர்க்காரின் போக்கை பற்றிக் கேட்டிருக்கிறார். நமது பிரசாரம் அர்த்தமற்றது என்று பிரசங்கம் செய்தவர்கள் நம்மைப் பின் தொடருகிறார்கள். சட்டசபையில் கேள்வி கேட்டதோடு மட்டுமல்ல; பொன்மலையிலே துண்டு அறிக்கைகள் வெளியிட்டு, "வட நாட்டுக்காரரை இங்கு வேலைக்கு கொண்டு வராதே" என்ற வாசகத்தையும் அதிலே கொட்டை எழுத்தில் தீட்டியிருக்கிறார்கள். அவர்களே நம்மை—நமது ஒலியை நெருங்கி வரும் போது, அமைச்சர் பக்தவத்சலனார் போன்றோர் மட்டும் — வடநாட்டு ஆலயத்துக்குக் காவடி எடுக்கும் கேவலப் போக்கிலிருந்து விடுபட மறுக்கிறார்கள்.

இந்த ராஜ்யத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் ஓயவில்லை— இங்கு வேலைகளில் அமர்த்த வேண்டும் என்ற கேள்விக்கு "கனம்" தந்த பதில்தான் "கோழிக்கும் சேர்த்துத்தான் புருக்கூடு" என்று கூறிய கோணல் புத்திக் காரனின் பதிலையும் தோற்கடிக்கக் கூடியது. "புருக்கூடு" நடக்காத கதை— இதோ நடக்கிற கதை—"நம்ம மந்திரி" நடத்திக் காட்டுகிற கதை.

"மத்திய அரசாங்கம் என்பது இந்தியா முழுமைக்கும்தான்" என்ற பதிலைத்தான் பக்தவத்சலம் கொட்டியிருக்கிறார்.

அதன் பொருள் என்ன? சென்னை மாகாணம் என்பது மத்

8-ம் பக்கம் பார்க்க

“கட்சியிலிருந்து விலகிவிட்டேன்”

தலைவர் அவர்கட்கு, வணக்கம்.

பள்ளியின் படிக்கட்டுகளை விட்டு இறங்கிய நாள் முதல், இந்நாள் வரை, ஏறத்தாழ நான்காண்டுகள் நான் ஆற்றிய கட்சிப் பணி நமதூரில் கட்சியின் வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரிந்தது என்பதை நீங்கள் மறுக்க மாட்டீர்கள்; மறுக்கவும் முடியாது அதற்கான சான்றுகளும் புகைப் படங்களும் என் வசமிருப்பதால்!

அந்த நாட்களில் — கடந்த நான்காண்டு காலத்தில், ஏற்படாத இன உணர்ச்சி—அரும்பு விட்டறியாத விடுதலை வேட்கை சென்ற ஒரு மாத காலமாக என் உள்ளத்தில் குடி புகுந்து களி நடமாடுகிறது. ‘ஏக இந்தியா’ ‘அகில பாரதம்’ என்றெல்லாம் பேசி, நாடு துண்டிக்கப்பட்டால் கேடுமலியும் என்று கர்ஜனை புரிந்தவன்தான். நான் மூவர்ணக் கொடிபிடித்து ஊர்வலம் வந்திருக்கிறேன், மூலை முடுக்குகளில், ‘ஜெய் ஹிந்த்’ கோஷமிட்டு தொண்டையை‘கட்டை’யாக்கிக் கொண்டதுமுண்டு. என்றாலும், அந்த வீணையை, எங்கிருந்து யார் மீட்டியதோ தெரியவில்லை— தென்றலில் மிதந்து வந்து நெஞ்சுக்குள் நுழைந்து விட்டது அந்த இன்ப ஒலி. அப்பப்பா, அந்தநாதம் நரம்பிற்குபுதுமுறுக்கேற்றும் சிரஞ்சீவிசக்தியை பெற்றிருக்குமென்று எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் உண்மை; அந்த வீணையின் நாதம், தங்கு தடையின்றி உட்புகுந்து செங்குருதியில் இரண்டறக் கலப்பதற்கு உறுதுணை புரிந்தது வடக்கத்தி காங்கிரஸ் தலைவர்களின் நாணயமற்ற போக்கும், நடை முறையில் கையாளும் நீதிக்குப்புறம்பானசெயல்களும்தான். நான் இளைஞன் தான், என்றாலும் என்னால் நிச்சயமாகச் சொல்லமுடியும்; தென்னாட்டுக்காரர்களை வடவர்கள் மதிப்பதே இல்லை. ‘தென்னாட்டுக்காரர்கள்’ என்று நான் கூறியிருப்பது காங்கிரஸ் தலைவர்களையும் சேர்த்துதான் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. நாம், ‘இந்தியைத் திணிக்காதீர்கள் என்றால், அவர்கள், திணிக்கத்தான் செய்வோம் என்கிறார்கள். மொழிவழி மாநிலம் பிரியுங்கள் என்று நாம் கூறினால், அதுகூடாது அப்பேர்ப்பட்ட கிளர்ச்சிகளில் காங்கிரஸ்காரர்கள் கலந்து கொள்ளலாகாது என காரியக் கமிட்டியில் தீர்மானம் போடுகிறார்கள்.

இந்தத் தீர்மானத்திற்குப் பயந்துதான், இந்த வாரத்தில் தொடங்கிய சட்டசபைக் கூட்டத்தில் ‘ஐக்கிய கேரள’ பிரச்சினை தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. அன்றையதினம் சட்டசபையில் மந்திரி சுப்ரமணியம் பேசுகையில் ‘எனக்கு விருப்பம்தான்-மேலிடத்து உத்தரவில்லையே’ என்று குறிப்பிட்டிருக்கிறார். இதிலிருந்து பார்த்தால் மனச்சான்றைக் கொல்லவும் வேண்டியிருக்கிறது காங்கிரசில் இருக்கவேண்டுமென்றால்!

‘ஆங்கில மொழி’ பற்றி எழும்பியுள்ள தகராறுகளை எடுத்துக் கொண்டால் அவை சொல்லத்தரமன்று. ஒரே கட்சியிலுள்ள பெருந்தலைகளுக்குள்ளேயே பெருங்குழப்பம்! அண்மையில் நிகழ்ந்துள்ள ஒரு மோதுதலை மட்டும் சுட்டிக் காட்டுகிறேன். டாக்டர் பி. வி. கேஸ்கர் வடநாட்டில் செல்வாக்குள்ள மனிதர்—விளம்பரத்துறை அமைச்சர். அவர் சொல்கிறார் “ஆங்கில மொழி தாய் நாட்டுப்பற்றை மறக்கச் செய்யும். அம்மொழி வேண்டாம்” என்று. ஆனால் சென்னை கவர்னர் பிரகாசா “ஆங்கில மொழியை ஒழிக்கக் கூறுகிறவர்கள், 900 ஆண்டுகளுக்கு முன்னேயே உரோமனியர்கள் பிரிட்டிஷ் தீவுகளை விட்டு வெளியேற்றப்பட்ட போதிலும் இன்னும் அங்கெல்லாம் லத்தீன் மொழி போதிக்கப்படுகிறது. என்பதை மறந்தவராவார்கள்” என்று எச்சரித்திருக்கிறார். இருவரும் ஒரே கட்சியைச் சார்ந்தவர்கள் தான்; ஆனாலும் இது போன்ற சண்டைகள்! இன்னும் இதுபோன்ற குறைபாடுகள் எண்ணற்றவை — எழுத முயன்றால் ஏடு போதாது.

மொத்தத்தில் தென்னாட்டாரை வேலையாட்களாகத்தான் டில்லி வட்டாரத்தினர் கருதுகின்றனர். வெள்ளையனுக்கு நாம் தான் இடம் விட்டோம்— இந்தியாவை அடிமையாக்கியது தமிழ் நாட்டார்தான் என்று பண்டிதநேரு சென்னைக்கு வந்திருந்தபோது குறிப்பிட்டார் — இந்தப் பழிச்சொல்லை என்னால் தாங்கமுடியவில்லை — வெள்ளைக்காரனுக்கு முன்பே கஜினி, முகமது கோரி இவர்களுக்கு வழி, விட்டது வடநாட்டார்தான் என்பதை பண்டிதர் மறந்துபேசினார். அன்றே இதற்கு மறுப்பு எழுதியிருப்பேன்—ஏன் எழுதவில்லை? காங்கிரசில் இரண்டறக் கலந்திருந்த காலமது!

அவர்கள் காட்டிவரும் இனபேதமும், பாரபட்சமும், மறந்திருந்த என் சொந்தத் தாயகத்தை, வரலாற்றிலே ஒளிவிடும் திராவிடத்தை என் கண் முன் கொணர்ந்து நிறுத்தி விட்டது இந்தியா ஒரே நாடல்ல என்பதையும் மெய்ப்பித்து விட்டது ஆகவே என் நாட்டை — தாய் நாட்டை முன்னோர்கள் ஆண்ட திருநாட்டை மீட்க புதிய இலட்சியம் ஏந்தி விட்டேன். ‘திராவிடநாடு திராவிடருக்கே ஆக வேண்டும்’ என்பதே என் ஜீவ லட்சியம். ஐயமிருந்தால் வினவுங்கள், அஃதின்றேல் ஓடோடி வாருங்கள்! திராவிடர்படை விடு கையேந்தி நிற்கிறது உங்களை வரவேற்க ஆகவே இதன் மூலம் எனது ராஜினாமாவையும் இன்று முதல், நான், இளைஞர் காங்கிரசில் நாலணா உறுப்பினர் கூட அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வண்ணம்

இளைஞர் காங்கிரஸ் ஊழியன்

(இந்தக் கடிதம், ஒருவர் காங்கிரசிலிருந்து வெளியேறி விட்டதாக வெளிவந்த பத்திரிகை செய்தியை யொட்டி எழுதப்பட்டது)

தேர் கவிழ்ந்தது ! ஆனல் தேவர்கள்?

மே. 9—

குடியாத்தம் அருகே உள்ள பள்ளிகொண்டை ரங்கநாதரின் தேர்உற்சவம் சுபவேளையிலே ஆரம்பமாகியும் கூட திடீரென அச்சுமுறிந்து தலைகுப்புறத் தேர்கவிழ்ந்து விட்டது. தேரிலுள்ள சிலைகள் நொறுங்கி விட்டன. தேர் இழுத்த மக்கள் ஒருவரோ ஒருவர் நசுங்கிப் போயினர். தேர் ஓட்டிய நிபுணர்கள் காயமடைந்தனர். ரங்கநாதப் பெருமாளும் குப்புறச் சாய்ந்தார். தேர்மேல் இருந்த பூஜை செய்யும் அய்யர்கள்மட்டும் எந்த ஆபத்து மில்லாமல் தேரின் மேலேயுள்ள தூண்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டுதப்பிவிட்டார்கள்.

தேசிகவிநாயகத்தின் திருவாய்மொழி

காந்தியடிகளும் மொழி வழி மாகாணத்தின் இன்றியமையாமையைப் பலபடக் கூறியுள்ளார். இவற்றை எல்லாம் மக்கள் மறந்துவிடவில்லை. ஆனல் சில தலைவர்களோ யாவும் மறந்து பேசுகின்றார்கள். மறந்தவர்களுக்கும் மறவாதவர்களுக்கும் சில மோதல்கள்; சந்தி சிரிக்கும்படியான மோதல்கள். என்னவிந்தை!

இப்பொழுது மாகாணங்களை மாற்றியமைக்கத் தொடங்கினால் பெரும் கஷ்டங்கள் ஏற்படுமாம். ஆம்; உண்மை. கஷ்டங்களுக்கு அஞ்சிச் செய்யத் தகுந்தவற்றைச் செய்யாமலிருப்பதா? பிள்ளைப் பேறு கஷ்டமானதுதான். அதற்காக மணம் செய்து கொள்ள விரும்பாதவர் உண்டா? ஆட்சிபீடம் ஒரு போதும் ஒரு பூப் படுக்கையாக இருந்ததில்லை; இராது. கஷ்டங்களில்லாத இன்ப நிலையமாக அரசாங்கம் இருக்குமானல் அதை நடத்த நம்மூரிலுள்ள குப்பனும் சுப்பனும் போதுமே. தலைவர்கள்ஏன்?

—தேசிக விநாயகம் பிள்ளை

கருணாநிதி நிகழ்ச்சிகள்

மே—14	திருப்புவனம் (மதுரை)
	15	சோழவந்தான்
	16	மதுரை
	17	திண்டுக்கல் (நாடகம்)
	27	ஆலந்தூர் (சென்னை)
	28	நுங்கம்பாக்கம்
	29	பரமக்குடி
	30	பீமநகர்

ஜூன் 1—முதல் 7 முடிய தஞ்சை மாவட்டம்.

11, 12, 13 நாஞ்சில் மாவட்டம்.

மதுரை மாகாளி பட்டி காசி செட்டியார் காம்பவுண்டில்

16—5—54 ஞாயிறு இரவு 10மணிக்கு

தோழர். மு. கருணாநிதி முன்னிலையில்

எஸ். எஸ். ராஜேந்திரன் நாடக மன்றத்தார் நடிக்கும்

அம்மையப்பன்

(கதைவசனம், மு. க.)

நடிகர்கள்:—புதுமை நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம். ஆர். சாமிநாதன், எம். என். கிருஷ்ணன், ஜி. சகுந்தலா.

தலையங்கம்

சென்னை (14—5—54) வெள்ளி

வெற்றி முரசு கொட்டுவோம்!

"என்னுடைய கல்வித் திட்டம் தவறானது எனில் என் கல்லறையின் மீது மண்ணைவாரிப் போடட்டும் என்று ஆச்சாரியார் கூறுகிறார்—கல்லறையின் மீது மண்ணைப் போடுவதை ஆச்சாரியார் காணமுடியாது—ஆகவே அவர் கண்ணுக்கு நேராகவே அவர் கல்வித் திட்டத்தின் மீது நாங்கள் மண்ணையள்ளிப் போடப்போகிறோம்"

என்று சென்னையில் ஜூலை 11, 12, தேதிகளில் நடைபெற்ற தி. மு. கழக மாவட்ட மாநாட்டிற்குத் தலைமை வகித்த அனுபவப் பெரியார் தோழர் எஸ். வி. லிங்கம் அவர்கள் அறைகூவல் விடுத்தார்கள். மறு ஜூலை வருவதற்குள்ளாகவே மமதையாளர்களின் எண்ணத்திலே மண்விழுந்துவிட்டது. "மக்களைக் கேட்டிடத் தேவையில்லை நான்—புத்தரும், இயேசுவும் மக்களைக் கேட்டா திட்டம் வகுத்தனர்?" என்று செருக்கு மொழி பேசியவரின் கொட்டம் உருக்குலைந்து போய்விட்டது.

"கல்வித் திட்டத்தை எதிர்ப்போர் கல்வியறிவற்றவர்" என்ற கனம் களின் கனல் மொழியும்—'கல்வியறிவற்றவரே பெரும் பெரும் கர்ம வீரர்' என்ற கல்கிகளின் கனிவு மொழியும் — ஒன்றோடொன்று மோதி உடைந்து சிதறிய கண்ணாடித் தூள்களாகப் போய் விட்டன.

'ஆகா-என்னை எதிர்த்தனரா-ஓகோ! சும்மா விடுவேனோ இவர்களை சுட்டுத்தள்ளாமல்!' என்று அதிரும் குரலில் முழங்கிய அயன் ராஜபார்ட், குதிருக்குள்ளே போய்விட்டார்.

'அவர் பதவி சதம்—நாமும் பல் இளித்தால் வாழ்வு 'கொஞ்சம் ஹிதம்' என்று நம்பி, 'திருத்தணி முருகா' எனத் திரிந்த ஒரு சில எம். எல். ஏ. பிள்ளையார்களும் துதிக்கையறுபட்டு தூவென உமிழப் பட்டுவிட்டன.

மழை பொழிந்தது-மகான் வந்ததால் என மக்களிடம்பிரச்சாரம் செய்தபோது கல்வித்திட்ட இடியும் இடிக்கிறதே; என கவலைப்பட்ட திராவிட மக்களின் மீது அடக்குமுறைப் புயலையும் அவிழ்த்துவிட்டு ஆணவ ஆட்டம் போட்டவர்—மாணவர் வாழ்வைக் கெடுக்க முனைந்தவர்-ஓடிப்போனது மட்டுமல்லாமல், அவர் தேடி வைத்த கொள்ளியும் அணைக்கப்பட்டுவிட்டது.'

ஆனந்தமான ஒரு பெருமூச்சுடன் தங்களின் அகமலர்ச்சியை முகமலர்ச்சியால் காட்டிக் கொண்டு நடைபோடுகிறார்கள் நாட்டுப் பெருங்குடி மக்கள்.

அப்பப்பா; இந்த வெற்றியைக் காண்பதற்கு மக்கள் சுமந்த சிரமம் எவ்வளவு? முற்போக்குக் கட்சிகள் அனைத்தும் ஒருமுகமாக எதிர்த்தன. திராவிடர் கழகம், மாநாடுகள் கூட்டங்கள் மூலம் கண்டித்தது. சட்டசபை முன்னே ஒரு நாள் மறியலும், பள்ளிக் கூடங்களில் ஒருநாள் அடையாள மறியலும் நடத்தியது. கம்யூனிஸ்ட் கட்சி புதிய கல்வித் திட்டத்தை திரும்பப் பெறுமாறு தீர்மானம் நிறைவேற்றியது. திராவிட முன்னேற்றக் கழகம் தோழர் சம்பத் அவர்கள் தலைமையிலே நீண்டதோர் போராட்டத் திட்டமே வகுத்து ஆச்சாரியார் வீட்டு வாயிலில் சட்டசபை முடியும் வரையில் மறியல் செய்தது. அந்தப் போர்த்திட்டம் வகுக்கக் கூடியிருந்த பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா, நெடுஞ்செழியன், போர்த்தலைவர் சம்பத், மதியழகன், என். வி. நடராசன் ஆகிய ஐவரும் கைது செய்யப்பட்டு மூன்று மாதம் சிறை வாழ்வு பெற்றனர். போரைத் தொடர்ந்து நடத்திய தி. மு. கழக முன்னணி வீரர்களும், மாவட்டத்து செயலாளர்களும் சிறை புகுந்தனர். மறியல் செய்யவந்த தொண்டர்கள் மீது தடியடிப் பிரயோகமும், கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் நடத்தப்பட்டது. தி. மு. க. வின் முயற்சியால் நாடெங்கும் உள்ள மக்களின் எண்ணங்களை கையொப்ப மூலம் அரசியலாருக்கு வாங்கி அனுப்பப்பட்டது. அந்தந்தத் தொகுதி எம். எல். ஏக்களை சந்தித்து, சட்டசபையில் புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்துப் போரிடுமாறு தி. மு. கழக செயல் வீரர்கள் ஊர்வலமாகச் சென்று கேட்டுக் கொண்டனர். அப்படி நடைபெற்ற ஊர்வலத்திலே தான் தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சென்னை கண்ணபிரான், அலமேலு அம்மையார் மற்றும் பலர் கைது செய்யப்பட்டார்கள். நாடெங்கும் நடைபெற்ற மாநாடுகளிலும், பொதுக் கூட்டங்களிலும், புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்து பெருஞ் சக்தியோடு தி. மு. க. வின் குரல் ஒலித்தது.

தி. மு. கழகம் நடத்திய போராட்டத்திலும், திராவிடர் கழகம் நடத்திய அடையாளப் பள்ளி மறியலிலும் ஆயிரக்கணக்கானோர் சிறை புகுந்ததை ஆச்சாரியார் கேலி செய்து, அவர்கள் எல்லாம் தற்குறிகள் என ஆணவம் பேசினார்.

நாட்டின் கட்சிகள் எல்லாம் எதிர்த்தது கண்ட காமராசர், காக பட்டராம் ஆச்சாரியாரால் காங்கிரஸ் மண்டபம் இடிந்து போய் விடுமெனக் கருதினாரோ; அல்லது தான் ஆடாவிடினும் தன் சதை ஆடும்—என்னும் இலக்கணத்திற்கு ஆட்பட்டாரோ — அல்லது திராவிட இனம் கருகிப்போய்விடும், இந்தக் கல்வித் திட்டத்தால், என்றுதான் கண்டுகொண்டாரோ; நாமறியோம்—அவரும் ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்தை எதிர்த்தார். அவர் மட்டுமா; ஓமந்தூரார் போன்றோர் எதிர்த்தனர். தமிழ்ப் பெருங்குடி மக்களின் எதிர்காலத்திலே ஆசை கொண்டவர்கள் அனைவரும், அந்தத் தளிர்த் தமிழ்கள் அழிந்து போகாதபடிப் பாதுகாக்கப் படைதிரட்டினர். நாட்டின்பால் பற்றுகொண்ட நல்லோர் அனைவரும் படைதிரட்டினர். தி. மு. கழகம் களமே அமைத்தது. காணிக்கையும் தந்தது, காளைகளின் கைகால்களை; கண்களை-ஏன்-உயிர்களையுங்கூட!

மக்கள் சக்திகள் அனைத்தும் ஒருமுகமாகவும்—பலமுனையிலும் தாக்கி பஜகோவிந்தப்பித்தரின் பவிசு கெட்ட திட்டத்தை சல்லடைக் கண்களாக ஆக்கிவிட்டன. சத்தற்ற அந்த சக்கை மட்டுமே தொங்கிக் கொண்டிருந்தது. சவத்தை ஏன் காற்றில் ஆடவிட்டு நாற்றத்தை சகித்துக் கொண்டு நாடாள வேண்டும் என்ற கேள்வியால் குடையப்பட்ட முதன் மந்திரி காமராசர், அந்தப் பிணத்தைப் புதைக்கும் வேலையிலே ஈடுபட்டுவிட்டார். ஏழுபேரடங்கிய கமிட்டியும் ஆழக்குழி தோண்டிவிட்டோம் ஆச்சாரியாரின் அருமருந்தன்ன திட்டத்திற்கு, என்று அறிக்கை விடுத்துவிட்டார்கள். அய்யோ பரிதாபம்; சிறுத்தொண்ட நாயனார் தான்பெற்ற சீராளனை தானே நறுக்கிக் கறி சமைத்துப் போட்டது போல—அமைச்சர் சுப்பிரமணியம், ஆச்சாரியாருடன் சேர்ந்து பெற்றதும்—ஆராரோபாடி சீராட்டியதுமாகிய கல்வித்திட்டமாம் சீராளச் செல்வனை-தானே கொன்றுபோடும் நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டு விட்டார். சிறுத்தொண்டன் பக்திக்குக் கட்டுப்பட்டான். இவரோ பதவிக்கு..........

அந்தச் சீராளன் பரமன் அருளால் பிழைத்துவந்தான்—என்பது புராணம். இந்தச் சீராளன் பிழைக்கமாட்டான்-காரணம்; காமராசர், சிவனல்ல! அதனால்!

அந்த நம்பிக்கை நட்சத்திரத்தின் உதயத்தைக்கண்டு நாட்டு மக்கள் பரவசமடைகிறார்கள். அவர்கள் நடத்திய போராட்டம், ஆம்; சாதாரணமானவர், சக்கரவர்த்தியை எதிர்த்து நடத்திய போராட்டம்-மனிதர்கள்-மகானை எதிர்த்து நடத்திய போராட்டம், மாபெரும் வெற்றியை அள்ளிக்கொடுத்துவிட்டது. துள்ளிக்குதித்து வெற்றி வீணை மீட்டுகிறார்கள்-பள்ளிக்குப்போகும் பாலகரை கள்ளிக் காட்டுக்கு அனுப்பிடும் காட்டுமிராண்டித் திட்டம் ஒடிந்த சுள்ளி போல் ஆயிற்றென ஒலிமுழக்கம் எழுப்புகிறார்கள்.

"வெற்றி! வெற்றி!!" என எட்டுத்திக்கும் ஆடிப்பாடுகிறார்கள், மக்கள். நாம் வென்றோம், மகானை எதிர்த்து, என மார்தட்டிக் கூறுகிறார்கள்!

அவர்களோடு நாமும் சேர்ந்து வெற்றி முரசு கொட்டுகிறோம்; ஆறியும்-ஆறாமலும் இருக்கிற நமது தியாகத் தழும்புகளை தடவிக் கொண்டே! வாழ்க மக்கள் சக்தி! வெல்க திராவிடம்!



• புதிய கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டத் தலைவர்.

1

சிறைச்சாலை-இரவு நேரம்

[சங்கு, சந்தனம் என்ற இரண்டு கைதிகள் பேசிக் கொண்டிருக்கிறார்கள்]

சங்கு :— என்ன சந்தனம் அண்ணே! சந்தோசம்தான் உனக்கு. நாளைக்கு விடுதலையாகப் போறே! உம் — அச்சடிச்ச சோறும் அவுன்ஸ் குழம்பும் வேப்ப மரத்து காத்தும், வேர்க் கடலை உருண்டையும் இன்னையோட சரி—இல்லியா?

சந்தனம் :— ஆமாம் சங்கு— உங்களை யெல்லாம் பிரியவேண்டுமென்று எனக்கு மிகவும்வருத்தமாயிருக்கிறது. ஏறத்தாழ எட்டு வருடமாக ஜெயிலுக்குள்ளேயே சிநேகிதர்களாக வாழ்ந்துவிட்டோம். சங்கு! நம்முடைய நட்பையெல்லாம் மறந்து விடாதேயப்பா!

சங்கு :— எப்படி மறக்க முடியுமண்ணே! நீ தினம் தினம் சொல்லுவாயே; அந்தக் கதைகளை மறக்க முடியுமா? பழைய காலத்து பாட்டுகளைப் பாடிக் காட்டி அர்த்தம் சொல்லுவியே; அதைத்தான் மறக்க முடியுமா? உனக்கு கிடைக்கிற எந்தப் பண்டத்திலியும் எனக்கு பாதி கொடுப்பியே அதைத்தான்மறக்க முடியுமா ? படிச்சவங்களோட சிநேகம்கிடைக்கிறதுகூட பெரிசு இல்லேண்ணே,படிச்சபுத்திசாலிகளோட சிநேகம் கிடைக்கிறது பெரிய பாக்யம் அண்ணே-அந்த வகையிலே நான் பாக்யசாலி தான்.

சந்தனம் :— நல்ல தோழனாக நீ இருந்தாய்–இனி இந்தப்பொல்லாத உலகத்திலே நான் யாரோடு போய் நட்பு கொள்ளப் போகிறேன்.

சங்கு :— ஒருத்தன் சிநேகிதமும் உனக்கு வேண்டாமண்ணே! நீயுண்டு உன் குடும்பமுண்டு என்று வாழ்க்கையை குஷியா நடத்துண்ணே போயி!

சந்தனம் :— குடும்பம்! எனக்கு யார் இருக்கிறார்கள் குடும்பம் நடத்த—? ?

சங்கு:— ஏன் அண்ணே கண் கலங்குறே! குடும்பத்தைப் பத்தி பேச்சு எடுத்தா எப்போதுமே நீ இப்படித்தான் ஆயிடுறே! நானும் இந்த எட்டு வருசமாத் தான் உன்னைக் கேட்கிறேன்—என்ன விஷயம்னு! உன் கதையைச் சொல்ல மாட்டேங்கிறே! அண்ணே—இப்பகூட உன் கதையைச் சொல்லக் கூடாதா?

வேண்டாம் வேண்டாம்— இதுக்காக அழாதே அண்ணே! இன்னைக்கு ஒரு நாளு; சந்தோசமா இருந்துட்டு வெளியே போண்ணே!

சந்தனம்:—சங்கு! என்கதையை இன்று சொல்லத்தான் போகிறேன். இருதயத்திலிருந்து சுமையை இறக்கத்தான் போகிறேன். உன்னைவிட நல்ல நண்பன் யாரப்பா எனக்கு இருக்கிறார்கள்?—உன்னிடம் சொல்லாமல் யாரிடம் என் சோகக் கதையை சொல்லப போகிறேன்.

சங்கு :— அண்ணே–ரொம்ப வேதனையாயிருக்கும்னா சொல்ல வேண்டாம்.

சந்தனம் :— என்னப்பா வேதனை! தூக்குக்குப் போகும் கைதிகளை துடிக்கத் துடிக்க இழுத்துப் போகிற காட்சியை இந்த சிறைக்குள்ளே எத்தனையோ முறை பார்த்திருக்கிறோமே அதைவிடக் கொஞ்சம் அதிக வேதனையானது என் கதை; அவ்வளவுதான். .சொல்கிறேன்கேள். என் முகம் இவ்வளவு விகாரமாக இருப்பது ஏன் தெரியுமா? சதை கிழிந்து கிழிந்து தொங்குவதற்குக் காரணம் புரியுமா? பிறக்கும் போதே நான் இப்படிப் பிறந்திருப்பேன் என்று நீ கருதுகிறாய்? என் அம்மா 'மாம்பழமேனி என் மகனுக்கு' என்று வர்ணிப்பார்களாம். உற்றார் உறவினரெல்லாம் "ஆடுதன் ராஜா போல இருக்கிறான், ஆண் சிங்கம்!" என்று பாராட்டுவார்களாம். ஏன்-அவள் கூட என் அழகுக்கு ஆசைப் பட்டுத்தான் என்னைக் காதலித்தாள்.

சங்கு ;— ஓ! காதலி வேறெ இருக்கிறதா?

சந்தனம் :— இருந்தாள் ஒரு காலத்தில்! இப்போது இல்லை. இனிமேலும் இல்லை.

சங்கு :— செத்து விட்டதா அண்ணே!

சந்தனம் :— என்னைப் பொறுத்த வரையில் அப்படித் தான்—

சங்கு :— ஏன்?

சந்தனம் :— அழகுக்காகஎன்னைக் காதலித்தாள்—நான் அலங்கோலமானதும் என்னை வெறுத்துவிட்டாள்......

சங்கு :— என்னது?

சந்தனம் :–ஆச்சரியப்படாதே சங்கு...பெண்களே அப்படித் தான்!...

சங்கு :— எல்லா பெண்களும் அப்படியிருக்கமாட்டாங்க அண்ணே!

சந்தனம் :— தவறான கணக்குப் போடுகிறாய் — அதற்குக் காரணம்—உனக்கு கல்யாணமாகவில்லை... சங்கு!

சங்கு :— எனக்குத்தான் கல்யாணம் ஆயிட்டுன்னு சொல்லியிருக்கேனே—

சந்தனம் :— அப்படியானால் உன் முகத்தில் யாரும் திராவகம் ஊற்றவில்லை ...... அதனால்தான் பெண்களைப்பற்றி உனக்குத் தெரியவில்லை.

சங்கு :— அய்யோ — உன் முகத்தில் திராவகமா ஊற்றினாங்க!

சந்தனம்:— ஆமாம் சங்கு ஆமாம்! நான் அழகாயிருந்தது பிடிக்காமல் அல்ல; என் அழகில் மயங்கி விட்டாளாம் அவள்— அதைத்தடுப்பதற்காக என்னை சித்ரவதை செய்து விட்டார்கள்.

சங்கு:— கொஞ்சம் விபரமாச் சொல்லண்ணே உன் கதையை!..

சந்தனம்:— சொல்லுகிறேன்– குறுக்கே கொஞ்சம் பேசாமலிரு! குமுதம் என்னோடு படித்தவள், குபேரன் வீட்டுக் கோதை. நானோ குடியானவன் மகன். இறந்துபோன என் அப்பாவின் எண்ணத்தை எப்படியும் பூர்த்தி செய்ய எண்ணி,என்தாய் என்னைப் படிக்க வைத்தார்கள். படித்தேன். குமுதமும் நானும்... சரி, கதையைவளர்த்துவானேன்; காதலர்களாகி விட்டோம். வலியோன்மகளை எளியோன் காதலித்தேன் என்பதைத்தவிர. எங்கள் காதலில் வேறெந்தக் குற்றமும் யாரும் சொல்ல முடியாமல் தான் இருந்தது. வழக்கம் போல் எங்களின் திருமணத் திட்டம் முறியடிக்கப் பட்டது. வயதான என்தாயும் வாழ்க்கையை முடித்துக் கொண்டார்கள்–குமுதமோ ஒரு நாள் இரவு என் குடிசைக்கு ஓடிவந்து "கொத்தடிமை ஆகிவிட்டேன் உங்களுக்கு-குடும்பம் நடத்துவோம் வாருங்கள்" என அழைத்தாள். 'எதிர்ப்புமலையாகுமே குமுதம்!' என எச்சரித்தேன். 'மலையைப் பிளக்கும் சிற்றுளி நம் காதல்" என்றாள்— மறுக்க முடியுமா என்னால்! அன்றிரவே பயணமானோம். அயலூரிலே எங்கள் குடும்பம்ஆரம்பமானது. ஆனந்த மயமான அந்த வாழ்க்கையை நினைத்து இப்போது அழுவானேன்! எங்களுக்கு ஒரு செல்வமும் தோன்றினான்.

சங்கு ;—பிள்ளையிருக்கானா அண்ணே உனக்கு ?

சந்தனம் :— இருக்கிறான்— கேள் பாக்கியை!...குழந்தையுடன் குதூகலமாய் நடைபோட்டோம் வாழ்வுப் பாதையில்! குமுதாவின் அண்ணன் மலேயா போயிருந்தவன் சம்பாதிக்க— அவன் திரும்பி வந்துவிட்டான். வீட்டார், விஷயத்தைச்சொல்லியிருக்கிறார்கள்—அவன் ஒரு பர்மாக்காரியை பாரியாளாக அழைத்து வந்தவன் — அவனுக்கு குமுதா மீது கொள்ளை ஆத்திரம் பிறந்துவிட்டது. ஆகவே எதிர்க்கப்புறப்பட்டான். ஆள் முரடன். சண்டை போட்டு சமாளிப்பது கொஞ்சம்

கஷ்டம்தான். குமுதாவை அடிமையாக்கினது என் அழகுதான் என்று யாரோ சொல்லியிருக்கிருர்கள் அவனிடம்—ஏன், குமுதாவே அடிக்கடி அதைச் சொல்லிக் கொண்டிருப்பாள். அந்த அழகையே குலேத்துவிடுகிறேன் என்று அவள் அண்ணன் அக்கினித்திராவகத்துடன் புறப்பட்டு விட்டான். வீட்டிலே தூங்கிக் கொண்டிருந்தேன். அவன் வந்து விட்டான். விழித்துக் கொண்டேன். திராவகத்தை என் அழகான முகத்திலே வீசி விட்டான். அய்யோ — அந்த எரிச்சலே இப்போது நினைத்தாலும் பயமாயிருக்கிறது. பொருமைக்காரர்களின் வயிற்றெரிச்சலேயும் மிஞ்சக் கூடிய எரிச்சல் அது! திராவகம் ஊற்றப்பட்ட இடத்தை கையால் தொடாமல் இருப்பது கொஞ்சம் நல்லதாம்—அவசரத்தில் அந்த யோசனே யெல்லாமா வருகிறது—முகத்தைத் துடைத்துக் கொண்டேன் கையால்; அப்போது கிழிந்தது தான் இந்த சதை யெல்லாம்—குமுதாவின் அண்ணன் ஓடினன், நான் துரத்திப் பார்த்தேன் முடியவில்லே — தெருவில் விழுந்து விட்டேன். குமுதாவும் குழந்தையும் அப்போது வீட்டில் இல்லே. பையனேப் பள்ளிக்கூடத்தில் கொண்டுபோய் விடுவதற்காகப்போயிருந்தாள். உடனடியாக என்னே யாரோ தெருவிலுள்ளோர் வைத்தியசாலேயில் கொண்டுபோய் சேர்த்தார்கள். குமுதாவும், குழந்தை செல்வனும் வைத்தியசாலேக்கு ஓடிவந்து அலறினர்கள். குமுதா என் முகத்தின் கோரத்தை கண்டு அலறிவிட்டாள். முதலில் நான் சோகத்தின் உச்சத்தில் அலறுகிருள் என்றுதான் நினேத்தேன். பிறகுதான் நான் ஊகித்துக் கொண்டேன்—அவளுக்குத் தேவையான அழகு முகம்போய் விட்டதேயென அலறியிருக்கிருள்என்று! மறுநாள் வைத்தியசாலேயில் இருந்தபடியே கேள்விப்பட்டேன்; குமுதா எங்கேயோ போய்விட்டாள் என்று. குழந்தை செல்வன் மாத்திரம் தெருவினரால் பராமரிக்கப்பட்டான். குமுதாவின் அண்ணன் மீது வழக்கு நடைபெற்றது. நானும் சிகிச்சை பெற்று இந்த அலங்கோலமான முகத்துடன் வெளியே வந்தேன். ஐந்து வருடத்திற்கு கிட்டதட்ட வழக்கு நடைபெற்று, கடைசியில்குமுதாவின் அண்ணன் விடுதலே பெற்ருன். குற்றவாளியல்ல என்று தீர்ப்பு கூறப்பட்டுவிட்டது. என்ளுல் தாங்க முடியவில்லே; பொறுக்க முடியாத ஆத்திரத்தால் துடித்தேன். அவசரப்பட்டு ஏதாவது செய்துவிட்டால், குழந்தை செல்வன் நாதி பற்றுப் போய் விடுவானே யென்று யோசித்தேன். கடைசியாக சிலரது சிபாரிசு பிடித்து, செல்வனே வெளியூரில் ஒரு பள்ளிக்கூட தர்ம உணவு விடுதியில் சேர்த்துவிட்டு ஒரு பெருமூச்சைவிட்டேன். அந்தப் பெருமூச்சைத் தொடர்ந்து குமுதாவின் அண்ணனேப் பழி வாங்கும் மூச்சும் பிறந்தது. குமுதா என் விகார ரூபத்தைச் சகிக்காமல் எங்கேயோ போய்விட்டாள்—குமுதா என் இருதயத்தைக் காதலிக்கவில்லே—லட்சணத்தைத் தான் காதலித்தாள் என்ற பேருண்மையை அவள் அண்ணன் வீசிய அக்கினித் திராவகம் எனக்கு உணர்த்தியது என்ருலும்கூட; போகும் பாதை மோசம் என்பதை எச்சரிக்கும் தோரணேயில் முள் குத்துகிறது என்பதற்காக அந்த முள்ளே எடுத்து முத்தமிட முடியுமா? அதை ஒடித்து முறித்து தூரத்தில் வீசித் தானே எறிகிருேம்; அது போலவே என் முகத்தைப் பாழ்படுத்தி காதல் பாதை மோசம் என்று உணர்த்திய மூர்க்கனே விட்டு வைக்க மனமில்லே. என் அருமைச் செல்வனுக்கு அறிவுரைகள் புகன்றேன்—"எந்தத் தவறு வேண்டுமானுலும் செய்! ஒரு பெண்ணே மட்டும் காதலிக்காதே!" என்பதை அவனுக்கு ஆயிரம் முறை சொல்லிவிட்டு கையில் ஒரு கத்தியுடன் புறப்பட்டேன் — குமுதாவின் அண்ணன், அந்த பர்மாக்காரி, அவர்களின் பெண் குழந்தை மூவரும் முற்றத்தின் பக்கம் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். யாரையும் கேட்காமல் உள்ளே நுழைந்தேன். வீட்டிலும் அவர்களேத்தவிர வேறு யாருமில்லே. குமுதாவின் தகப்பன் இரண்டு வருடங்களுக்கு முன் இறந்து விட்டான்—பர்மாக்காரிக்கும் க்ஷயரோகம் வந்து மிகவும் கஷ்டப்படுகிருள் என்று கேள்விப் பட்டிருந்தேன். இந்த சோக நிகழ்ச்சிகள் எல்லாம் குமுதாவின் அண்ணனேத் தாக்கி வேதனே கொடுத்திருந்தாலும்கூட, நான் நேரிடையாக வஞ்சம் தீர்த்துக் கொள்ளவே மிகவும் துடித்தேன். அவர்கள் பக்கம் வேகமாக வந்தேன். பர்மாக்காரி பலமாக இருமிக் கொண்டிருந்தாள். கையிலிருந்த கத்தியை குமுதாவின் சகோதரனுடைய நெஞ்சில்—ஆம், என்னே அலங்கோலப்படுத்திய அந்தப் பாவியினுடைய இருதயத்துக்கு நேராக செலுத்தினேன்—மாறி மாறிக் குத்தினேன் - அங்கேயே பிணமானுன். அதனுடையவிளேவுதான் சங்கு, இத்தனே ஆண்டு சிறைவாசம்! அவன் என்னேக் கொல்லாமல் கொன்று விடுதலே பெற்ருன்—நான் அவனே ஓரேயடியாகக் கொன்று தண்டனே பெற்றேன்.

சங்கு :— என்னுல் உன் கதையைத் தாங்க முடியவில்லே அண்ணே! போகட்டும், நாளேக்கு வெளியிலே போயிமகனேயாவது சுகமாகக் காப்பாத்து அண்ணே!

சந்தனம் :— என் செல்வனுக்காகத்தானே, நான் வாழ்ந்து கொண்டிருப்பதே — ஆனல் ஒன்று, என் மகன் எந்தப் பெண்ணேயும் காதலிக்கவிடமாட்டேன்.

சங்கு :— அப்படியெ ஆத்திரத்திலே சொல்லாதே அண்ணே —

சந்தனம் :— அமைதியாகத்தான் சொல்லுகிறேன்—போன மாதம் கூட பையன் என்னேப் பார்க்க வந்திருந்தானே; அப்போதும் அவனுக்கு "யாரையும் காதலிக்காதே!" என்று சொல்லித்தான் அனுப்பினேன்- அழகைவிரும்பும் அரக்கிகளிடம் காதலா! கூடாதப்பா கூடாது!

சங்கு:— சரியண்ணேவா — அதோ களிப்பட்டை வந்துட்டுது! வா, சாப்பிடலாம் — நாளேக்கு எங்கே நம்ப ரெண்டு பேரும் சாப்பிடப் போருேம்—நீ வெளியிலே—நான் உள்ளே!... வாண்ணே வா!

(இருவரும் சாப்பிடப் புறப்படுகிருர்கள்)

2

இரவு நேரம்—நிலவு, ஒளி மழை பொழிந்துகொண்டிருக்கிறது. விடுதலே யடைந்த, சந்தனம் தன் புத்திர சந்தானத்தை எண்ணிப் பூரித்தபடி அவனேக் காணப் போகிருேம் என்ற மகிழ்ச்சி பொங்க நடந்துகொண்டிருக்கிருன், மகன் வாழும் உணவு விடுதி நோக்கி! உலகத்தைப் பல ஆண்டுகளுக்குப்பிறகு பார்க்கும் அவனுக்கு எத்தனே எத்தனேயோ புதிய நினேவுகள் மோதுகின்றன. மகன் நன்கு படித்து திறமை பெற்றிருப்பான்—தான் சொன்ன "காதல் ஒரு கடும் விஷம்" என்ற உபதேசத்தைக் கடைப் பிடிப்பான். தந்தை சொல் தவருத தனயனேப் பெற்ற பாக்கியமே பாக்கியம் — இப்படியெல்லாம் எண்ணியபடி நடக்கும் சந்தனத்தின் காதில்ஏதோ ஒரு கீதஒலி கேட்கிறது. நிலவு மழையிலேஅவனும் பலமுறைகீதமிசைத்திருக்கிருன் குமுதாவுடன்... அதே போன்ற ஒரு கீதம், அவனுக்கு ஆத்திரமூட்டும் கீதம் இப்போதும் கேட்கிறது. குளிர்ச்சியூட்டும் இசைதான்; அவனுக்குப் பழக்கமான சொற்கள்தான்; ஆனுல்இப்போது மட்டும் அவனுக்கு அந்தக் கீதம் இடி முழக்கமாக இருப்பானேன்- குமுதா பாடிய அதே பாட்டுத்தான்அது! சந்தனத்தின் தோளிலே முகத்தைப் பதித்துக் கொண்டு அவன்காதலி இசைத்த கீதம் தான் அது!

"காதலோர் தொடர்கதையே!
சாதலும் ஏற்போம் ✦ அணுச்
சஞ்சலமும் அடையோம்—எனும்
காதலோர் தொடர்கதையே!"

இந்த எழிலும் எழுச்சியுமிக்க வரிகள் சந்தனத்தின் உள்ளத்தைத் தொட்டு உலுக்கிவிட்டன; 'ஆம்; குமுதா தான் அப்படிப் பாடமுடியும்-வேறு யாரும் பாட முடியாது—" என்று தனக்குள் கூறிக்கொண்டான். கண்களில் கனல் கிளம்பியது. "குமுதா!" என்று பயங்கரமாக உச்சரித்தபடி இசை வந்த பக்கம் பாய்ந்தான். அவன் எதிர் பார்த்தபடி பாடியது இருவர்தான்!

அவர்களிடம் வேகமாக நடந்தான் சந்தனம். அவர்கள் இருவரும் தழுவியபடி பேசிக்கொண்டிருந்தனர். அவனும் அவளும் தான்!

அவன் :— கண்ணே-எவ்வளவு களிப்பூட்டும் தென்றல் இந்தப் பாட்டு!...ஆயிரம்முறை பாடினுலும் அலுப்பு ஏற்படுவதில்லேயே கேட்க—சொல்லாழமா? அல்லது சுந்தரியின் குரல் நயமா?

அவள் :— இரண்டுமில்லே... கருத்தற்ற சாகித்யமும், கனிவற்ற தொனியும்கூட கற்கண்டும் தேனுமாகிறது, இந்தக் கண்ணளரின் மடியிலே நான் படுத்திருக்கும்போது!...

அவன்:— சித்ரா...... என் சிந்தை கவர்ந்தவளே... இந்த நாள்போல் எந்த நாளும் இன்பம் குவியுமல்லவா?...

அவள்:— இந்த நாள்போல் என்று சொல்லாதீர்கள்... இந்த நாள் தோற்றதென அடுத்த நாள் சொல்லும், அடுத்த நாளே மறுநாள் வெல்லும்—அந்த மறுநாளே இன்னெரு புது நாள் கொல்லும்—என்ன செல்வம் சரிதானே!

ஆம்—சந்தனத்தின் மகன் செல்வம்தான் சித்ராவுடன் காதல் மொழி பேசி களித்துக் கிடக்கிருன். அதை சந்தனம் நேரில் பார்த்துவிட்டான். "காதலோர் கடும் விஷம்" என்று போதனே செய்தவனின் புத்திரன் பூப்படுக்கையிலே புதுப் பெண்ணின் மனதை அள்ளிக் கொண்டிருக்கிருன். ஆத்திரம் தாங்காத சந்தனம் 'அடே செல்வம்!' என்று பாய்ந்தான். அந்தப் பைங்கிளி சித்ரா பயந்து விட்டாள். அவளால் அந்த அகோரமான மனிதனின் முகத்தைப் பார்க்க முடியவில்லே; அலறினுள். சந்தனம் அந்தப் பெண்ணே ஓங்கி அறைந்தான், ஓடிப் பிடித்து! அடியைப் பெற்றுக் கொண்டு அவள் ஓடி விட்டாள். "அப்பா! அப்பா!" என்று செல்வம் கத்தினுன். "உன் உயிரைஎடுத்துவிடுகிறேன் வா!" என்று உறுமியபடி செல்வத்தின் கையைப் பிடித்து பரபரவென இழுத்துக் கொண்டு போனுன் சந்தனம்.

(தொடரும்)

○

விரைவில் ஆரம்பமாகிறது

?

மு. க. வின் புதிய தொடர் கதை

அவர்கள் மாநாட்டில்....!

மதம் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டை என்ற கருத்துக் கொண்டவர்கள் நாம். மதம் அவசியம் என்று யார்பேசினும் நாம் நமது கருத்தைத் தெரிவிக்க என்றும் தவறியதில்லை; அந்த முறையிலேயே ஒருசிறு விளக்கம் தந்திருக்கிறோம்.

அய்தராபாத்தில் நடைபெற்ற இந்து மகாசபை மாநாட்டில், மகாசபைத் தலைவர் சட்டர்ஜி சங்க நாதம் செய்திருக்கிறார், “அவமானம், அவமானம்! வேற்று மதங்கள் வளர்ந்து வருகின்றன, இந்து மதத்தினராகிய நமக்கு இழுக்கு இழுக்கு!—” என்று. இந்து மதத்திற்கு எதிராக, கிறிஸ்து, இஸ்லாம் மதங்களுக்கு ஆதரவாக வாதிடுவது குறித்து அம்மதங்களின் அனுதாபிகளென்று எம்மைக் கருதிவிடவேண்டாம். மதம்—அது எம்மதமாயினும் மக்களுக்கு அபின் தான்—மதத்தைப்பற்றி நாம் கூறும் இரத்தின விளக்கம் இது தான். ஆனாலும் இந்து மதத்தைக் காட்டிலும், கிறிஸ்து மதமும், இஸ்லாமிய மதமும் மேலானது என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு—நெடுநாட்களாக! இஸ்லாமிய மதத்திலும், கிறிஸ்து மதத்திலும் பகவான்களின் அவதாரமில்லை, பள்ளு, பறைபதினெட்டு ஜாதிகளில்லை. மந்திரங்களைப் படித்துக் கொண்டவர்கள் மதகுருவாகலாம் — இஸ்லாமிய மதம் அனுமதிக்கிறது. வேதங்களைக்கற்றுக்கொண்டவர்கள் பாதிரியாக முடியும் — கிறிஸ்துமதம் வரவேற்கிறது. ஆனால் இந்து மதத்தில் ஒரு அய்யங்காரோ, ஆச்சாரியாரோ, சர்மாவோ, சாஸ்திரியோ தான் ஆலயத்திற்கு அர்ச்சகராக வரமுடியும். மக்கள் எதை விரும்புவார்கள்? ஆஸ்தியைக் கொட்டினாலும், ஆயுளை அர்ப்பணித்தாலும் மூலஸ்தானத்திற்குள்ளே மட்டும் அனுமதியோம் என்றுகூறும் இந்துமதத்தையா விரும்புவார்கள்! சட்டர்ஜி செப்புகிறார்‘கிறிஸ்துமதம் வளர்ந்து வருகிறது; இது நமக்குக் கேவலம்”என்பதாக. சட்டர்ஜி முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதியாம், அவருக்கு சட்ட நுணுக்கங்கள் தெரியுமாம், அதனால்தான் “சுதந்திரமடைந்தபின் கிறிஸ்து மதத்திற்கு மாறியவர்கள் இந்துமதத்திற்கு வந்து விட வேண்டும்” என்கிறாராம்-அவரே சொல்கிறார் இவ்வாறு. யார்ஒப்புவார்கள் இதை? பிறரை பலாத்காரமாக இந்து மதத்திற்கு இழுத்துவர அனுமதிக்கும் சட்டம், தனிஒருவனை, அவனுக்கு இஷ்டப் பட்ட மதத்தில் சேர அனுமதியளிக்கவா மறுக்கப் போகிறது! இருதயமுள்ளவர்கள் கூடி தயாரித்த சட்டங்கள் தானே இந்தியக் குடியரசுச் சட்டம்! எண்ண, எழுத, பேச, உரிமை அளித்துவிட்டு, மதமாற உரிமைதர மறுக்கும் சட்டத்தை வைத்தாலும் நாடு குடியரசு நாடே அல்லவே! ஆனால் சட்டர்ஜி சொல்கிறார் — சுதந்திரத்திற்குப்பின் மத மாறியவர்கள் இந்து மதத்திற்கு வந்து விட வேண்டும்” என்று.— அதுவும் இறுமாப்போடு—கட்டளையிடும் தோரணையில்! அவர் அப்படித் தான்சொல்வார்—சட்டமறிந்தவராயிற்றே!

சட்டர்ஜியின் போதைப் பேச்சு அதோடு நின்றுவிடவில்லை. ஏன், சட்டம் மூலம் மத மாற்றத்தைத் தடை செய்யக் கூடாது? என்று பொருள்பட சில வார்த்தைகளையும் கொட்டியிருக்கிறார். அதையும் படியுங்கள்; “இப்படி யெல்லாம் மத மாற்றம் ஏற்பட்டு வந்தால் நமக்கு சுதந்திரம் அடைந்தும் என்னபயன்?”—பேசுகிறார் சட்டர்ஜி. இந்துமதத்திலே சேரப்போனவர்களை வெள்ளைக்காரர்கள் சுட்டுக்கொன்றார்களா? சிறைக்குள் தள்ளினார்களா? இன்னும் சொன்னால், வெள்ளையர் இல்லாவிட்டால் இந்துமதம் இந்த வளர்ச்சியையும் அடைந்திருக்காதே!-இதை சட்டர்ஜி நன்கறிவார். ஆகவே ‘சுதந்திரம் கிடைத்தும் பயன் என்ன’ என்று சட்டர்ஜி சொல்லியிருக்கும் வாக்கியம் வெள்ளைக்காரர்கள் இந்துமத வளர்ச்சிக்குஇடையூறாக இருந்தார்கள் என்பதை குறிப்பிடுவது அல்ல, ஏன் சட்ட மூலமாக பிற மதங்களை ஒழிக்கக் கூடாது என்று சொல்லாமற் சொல்வதாகும் அது. இதைத் தவிர வேறு மறை பொருள் இருப்பதாகத் தெரியவில்லை.

மக்களின் மனச்சான்றை தற்கொலை செய்து கொள்ளவைக்கும் சட்டர்ஜிபோன்ற தயாள(!) சிந்தையினர்தான், இந்தியா இந்துமகாசபையினரின் ஆட்சிக்குக்கீழ் வரவேண்டுமென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். மந்தியின் கையில் கொடுத்த மலர்மாலைகூட சிறிதுபயன்படும், கோட்சேயின் அனுதாபிகள் கையில் சிக்கியநாடு கொலைக்களமாகி, அதனால் செஞ்சேற்றின் பிம்பம் உச்சிவானத்தை சிவப்பாக்கத் தவறாது.

○

தருமு தந்தையானார்

திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் 8–5–54 மாலை ஓர் ஆண் மகவுக்குத் தந்தையானார். தாயும் குழந்தையும் நலம்.

நஷ்ட ஈடு - நாமறியோம் - நாடறியும்!

கிழக்கு பாகிஸ்தானில் 1952ம் ஆண்டு நடைபெற்ற மொழிக்கிளர்ச்சியில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்க கி. வங்க சர்க்கார் முடிவு செய்துள்ளதாகவும், அதுபற்றி முதன் மந்திரி ஹக், ஏற்கனவே ஒரு உத்திரவு பிறப்பித்து இறந்தவர்களின் விபரம், உறவினர்களின் முகவரி அடங்கிய ஒரு பட்டியல் தயாரிக்குமாறு கல்வி மந்திரியைக் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. மொழிக் கிளர்ச்சியின் விளைவுதான் கி. வங்கத்தின் அரசியல் மாற்றத்துக்கு காரணம் என்பதை மாற்றுக் கட்சியினர் மறைத்திடப் பார்த்தனரே; அவர்கட்கு இந்தச் செய்தி ஒரு நல்ல பதிலாகும். மக்கள் நடத்திய கிளர்ச்சியிலே அரசாங்கத்தின் அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்படுவதால் பலரின் உயிர் பறிக்கப்படுகிறது. அடுத்துவரும் அரசு கட்டில் ஏறிகள் அப்படிப் பறிக்கப்பட்ட செல்வங்களின் குடும்பத்தினருக்கு உதவி செய்வதுதான் நாகரிகமும்—கண்யமும்—இரக்கமும் கலந்த நற்பண்பாகும். அந்த நற்பண்பு, கி. வங்காளத்திலே ஹக் உருவத்திலே நடமாடுகிறது. ஆனால் இங்கோ, தமிழரின் போராட்டங்கள் மிகப் பெரிய அளவில் இரண்டு முறை நடைபெற்றன. இருமுறையும் ஆச்சாரியார்தான் அமைச்சராயிருந்தார்- ஆவியிழந்தனர் பலர்—அங்கமிழந்தனர் பலர்—அவர்கள் இல்லாத குடும்பங்கள் ஆதரவற்ற குடும்பங்களாகிவிட்டன. ஆச்சாரியாரின் சர்க்கார், அந்த மொழிப்போர்—இனப்போர் வீரர்களின் குடும்பங்கட்கு எள் முனை உதவியும் செய்திட முன் வந்திடவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் தன்னால் இயன்ற அளவு அந்தக்குடும்பங்கட்கு உதவி செய்திருக்கிறது; இன்னமும் செய்யப் போகிறது. சேலத்திலே நடைபெற்ற தி. மு. க. மாவட்ட மாநாட்டிலே, ‘அடக்குமுறைக் கோடுமையால் உயிரிழந்த தோழர்களின் குடும்பங்கட்கு நஷ்டஈடு உடனடியாக வழங்குமாறு அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது” என்ற ஓர் தீர்மானத்தையும் நிறை வேற்றியிருக்கிறது. ஒரு கட்சி செய்யும் உதவியைவிட சர்க்கார் செய்யும் உதவி அதிகமாக இருக்கும் என்ற நம்பிக்கையே இந்தத் தீர்மானத்திற்குக் காரணம். மஜீத், தாளமுத்து போன்றவீரர்களின் குடும்பத்துக்கும், இன்னும்பல குடும்பங்கட்கும் முடிந்தஅளவு உதவிசெய்த கழகம் இனியும் அப்பணியினைத் தொடர்ந்து செய்யத் தயாராயிருக்கிறது. ஆனாலும் ஆச்சாரியார் போன பிறகு, புதிதாக பொறுப்பேற்ற காமராசர் நமதுதீர்மானத்தை எப்படிக்கவனிக்கப் போகிறார் என்று பார்ப்போம். அங்கே மொழிப்போர் முடிந்து—பஸ்லுல்ஹக் மந்திரியாக வந்தார். போரில் உயிர்நீத்த குடும்பங்கட்கு உதவுவேன் என உரைக்கிறார். இங்கும் இன—மொழிப்போர்கள் நடைபெற்ற இடையே காமராசர் வந்திருக்கிறார்-மந்திரியாக!

‘வாடும் குடும்பங்கட்கு வகை செய்கிறேன்’ என்று வாயைத்திறக்க மறுக்கிறார்

நாமோ — தீர்மானம் போடுகிறோம், நம்மால் முடிந்த உதவி செய்கிறோம் — அங்கே, நஷ்டஈடு அவர்களாகவே தருகிறார்கள். கேட்கிற நாம்—நஷ்டஈடு கொடுக்கிற நிலைமைக்கு நாடாள வரத்தான் போகிறோம் — நாம் தரப்போகிற நஷ்ட ஈடு, நாதியற்ற குடும்பங்களுக்கு! நமது குரலைக் கேளாது திரிகிற இவர்கள் தரப் போகிற நஷ்டஈடு — எதுவோ? நாமறியோம்! எப்போதோ? — அதுமட்டும் விரைவில் என்பதை நாடறியும்.

ஆண்டு குறித்தாகி விட்டது!

இந்தக் கார்ட்டூன், 9-4-54-ம் தேதிய “முரசொலி” இதழில் வெளியாகி உள்ளது. புதுக் கல்வித்திட்டத்தின் மரணம் 195(?) என்று குறிப்பிட்டுள்ள இடத்தில் ‘மரணம் 1954’ என்று போட்டுக் கொள்ளவும்.



★ ★ ★

பரோபகாரி!

★ ★ ★ [உருவகச் சித்திரம்]

சிலம்புதிர்க்கும் கீதம் சிற்றிடையாள் வரவு கூறும்; இதோ இங்கு கூடுநோக்கி சோலையை வலம்புரியும் கிள்ளைகளின் கானம், மாலை மங்கையின் நடையழகு நவிலும்

பொன்னின் கட்டிகளை விட்டு விட்டு சாக்காட்டின் வாயிலுக்குள் பிரியாவிடை பெறும் கருமிகளைப் போல மண்ணின் மேட்டை—அதில் அமைத்த சின்னஞ் சிறு வீட்டை விட்டுப் பிரியும் சிறுவர் சிறுமியரின் வாட்டம்!

இந்தக் காட்சி ரசனையை ஓய்வு நேரத்தில் பருகிக் களிக்க மாடிச் சுவற்றின் கோடிவரை உலவி வரப் புறப்பட்டது ஒரு கரப்பான் பூச்சி.

அசையும் நிழலெல்லாம் பசியால் குழையும் குடலுக்கு இரையாய்த் தோன்ற, வாடியிருந்தது ஒரு செந்தேள் ராஜா... தேர்ந்தெடுத்த கட்டாணிமுத்தின் கோர்வையைப் பழிக்கும் அழகான வாலை ஆட்டிக்கொண்டே அலைந்துகொண்டிருந்தது.

"கரப்பான் பூச்சியே! முதிர்ந்த பனங்காயின் முதுகில் இருக்கும் முத்திரையைப்போல உன் சிறகுக்கு எவன் வர்ணம் பூசினன்?......வணங்காயோ என் முன்னே; நானே உந்தன் ராஜா!", என்றது.

சிறகைக்கூட ஆட்டத் தெரியாத கரப்பானுக்கு புதிய ராஜாவின் அறிமுகம் புதிராகப்பட்டது. அசையும் மீசைகள் நடுக்கத்தைப் பதியவைக்க மெல்ல நடை போட்டது அந்தக் கரப்பான்.

அவ்வளவுதான்; செந்தேள் அரசன் கரப்பான் குஞ்சைக் கட்டிப் பிடித்தது; கடித்துத் தின்ன பற்களைத் நீட்டியது.

"மினுக்கும் சிறகுகள் உனக்குத்தான் சொந்தமென்று இறுமாந்திருந்த கரப்பான் இனமே! உன் வில்லன் மீசையை என்ன செய்கிறேன், பார்!"—இப்படி இடியோசை எழுப்பி எள்ளி நகையாடியது செந்தேள்.

"செந்தேள் ராஜாவே! சுண்ணம்பு உதிர்ந்து காட்சி அளிக்கும் இந்த சுவரென்னும் சாம்ராஜ்யத்தில் நானோர் சாமான்யப் பிரஜை! இந்த ஏழை செய்த தவறென்ன மன்னவரே? அடியேன் தெரியலாகுமோ?"—கவலையோடு கேட்டது கரப்பான் பூச்சி.

ஏளனச் சிரிப்பு முன்னுரை பகர செந்தேள் சொன்னது:

"எதிர்த்துப் பேசும் அற்பப் பயலே! உந்தன் வர்க்கம் மானிட சாதிக்கு என்றுமே களங்கம்.

உணவிலே படுகிறாய்: உடன் பட்டுப் போகிறது அந்த மனிதர்கள் வாழ்வு!

சரசாவின் நெஞ்சைக் குடைவதுபோல அடுக்கிவைத்த ஏடுகளை நறுக்கிப் போடுகிறாய்!

கரப்பான் ஜாதியே! உந்தன் வாசம் மாதர்தம் சுகாதாரத்துக்கு என்றுமே நாசம்! எனவேதான் உங்களை சம்காரம் செய்யப் புறப்பட்டு விட்டேன்! இப்போதே உன்னை ஒழிக்கிறேன்; மானிட ஜாதியின் புண்ணை அழிக்கிறேன்"—இப்படிச் சொல்லி கரப்பான் குஞ்சை வெடுக்கென்று விழுங்கியது செந்தேள் ராஜா.

"சுத்தம் வாழ்க! கரப்பான்கள் செய்யும் அசுத்தம் ஒழிக!" என்று முழக்கமிட்டது. ஏப்பம் வந்தது; வயிறு நிரம்பியதால் நித்திரையும் வந்தது.

வாத்தியார் சொன்ன கணக்கைப் போட கரும் பலகை எடுக்க தன் அரும்புக் கரத்தை அப்படியே நீட்டினாள்; விளையாடித் திரும்பிய சிறுமி ஒருத்தி! செந்தேள் ராஜாவின் நித்திரானந்தம் குலைந்தது...

பின்னர்?............

அங்குசம் போன்ற ஊசிக் கொடுக்கிற்கு உத்தரவு போட்டது. அவ்வளவுதான்! சுருண்டு விழுந்தாள் அந்தச் சிறுமி! ஓடி ஒடுங்கியது அவளுடைய சப்த நாடிகள்! மாந்தரின் நலனுக்காக கரப்பான் என்னும் அரக்கனை ஒழித்த பரோபகாரி அரண்மனைக்குப் போய்விட்டார்.

—மாறன்

துரோக ராட்டினம்!



வங்கம் வென்றது! மொழிப் போரின் வெற்றிக் கொடி!!

★

மொழியை இகழ்ந்தவனை முடிதரிக்கவிடேன் என்று முரசொலித்த கிழக்கு வங்கம் அண்மையில் நடந்த தேர்தலில் சொன்னதைச் செய்து காட்டியதல்லவா? இதோ; பாகிஸ்தான் அரசாங்கம்—ராஜாங்கபாஷைகளில் ஒன்ருக வங்காள மொழியை அங்கீகரித்து விட்டதாக அறிவித்து விட்டது. கிழக்கு வங்க முதன் மந்திரி பஸ்லுல் ஹக், டாக்காவில் நடைபெற்ற தாகூரின் 94வது பிறந்தநினக் கொண்டாட்டத்தில் பேசும் போது, பாக். அ. நி. சபை, வங்க மொழியையும், உருது மொழியுடன் ராஜாங்க பாஷையாக ஏற்றுக் கொண்டதைப்பாராட்டிய தோடு, தாம் அடையும் பெருமகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டிருக்கிறர்.

மேற்கு பாகிஸ்தானில் இதுபற்றிய சிறு குமுறல் ஏற்பட்டிருக்கிறது. கராச்சியில் வெளியான உருதுப் பத்திரிகைகள் எல்லாம், வங்க மொழியையும் ராஜாங்க மொழியானதைக் கண்டிக்கும் தோரணையில் கருப்பு பார்டர்களை முதல் பக்கத்தில் அமைத்திருந்தன. தங்கள் வெறுப்பைக் காட்டுவதற்காக உருது மொழி வெறியர்கள் கருப்புக்கோடுகளுடன் ஏடுகளை வெளியிட்டாலும் கூட—அதைப் பார்த்து வங்க மொழிக் குடையோர்—"பார்பார்! உருது பாஷை ஆதிக்க வெறியர்கள், முகத்தில் கரி பூசிக்கொண்டு கிளம்பியிருக்கிறார்கள் பாபம்!' என்று தான்கூறி கைகொட்டிச் சிரிப்பார்கள்.

கடமை தீர்த்த வங்கம் களிப்புக்கடலில் நீந்துகிறது!

காத்திருக்கிற திராவிடம், கடமை தீர்ப்பது எப்போதோ?

களிப்பு சிந்துவது எப்போதோ?

விரைவில்! விரைவில்!!

என்ற வெற்றி கீதம் மொழிப் போர் வீரர்களின் காதில் விழத்தான் செய்கிறது.

சென்னை நகருக்கு
'முரசொலி'
விற்பனையாளர்
ஜி. என். சாமி
கே. டி. சம்பந்தம்-கோ
மவுண்ட்ரோடு
சென்னை.

கடைசிப்பக்கம்

லிங்கையா, தாடிக்கோழும்பு

(?) இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் போர்மூண்டால் தி. மு. க. எதை ஆதரிக்கும்?

குழந்தைகளின் சண்டையில் பெரியவர்களின் பங்கு என்ன... என்று கேட்பது போலிருக்கிறது இது! இரு குழந்தைகளையும் விலக்கிவிட்டு புத்திசொல்லி அனுப்புவதுதான் பெரியவர்களின் பண்பு. தி. மு. க. வை பெரியவர் நிலையில் வைத்துப் பேசுவது தற்புகழ்ச்சியல்ல— இந்தியாவும், பாகிஸ்தானும் குழந்தைகள் என்று சுட்டிக்காட்டவே அந்த உதாரணம் தேவைப்பட்டது. அவைகள் வயதிலே மட்டும் குழந்தைகள் அல்ல; செய்கையிலும் அப்படித்தான். அடிக்கடி அமெரிக்கக் கிணற்றோரத்திலே நின்று துள்ளிக் குதித்து உள்ளே எட்டிப் பார்க்கின்றன. இரண்டுக்கும் போர்மூண்டால் — அதை போர் எனக் குறிப்பிடமுடியாது; குழந்தைச் சண்டை என்றே குறிப்பிடமுடியும். திராவிடத்தை பாதிக்கும் எந்த நிகழ்ச்சியையும், உலக சமாதானத்தை மூளிப்படுத்தும் எந்த செயலையும் தி. மு. க. எப்போதும் ஆதரிக்காது.

(?) ஆரியர்கள் இங்கு புகுந்ததில் திராவிட மக்களுக்கு ஏற்பட்ட நன்மை தீமைகள் என்ன?

அவர்கள் தீட்டிக் கொண்டு வந்த நன்''மை''யால் ஏற்பட்ட தீமைகள் ஒன்ரு இரண்டா சொல்லுவதற்கு!...

ரகுராமன், நெல்லை.

(?) ரயில் நிறுத்தம், கல்லக்குடி முதலிய போராட்டங்களுக்கெல்லாம் தந்தை பெரியாரிடம் அனுமதி கேட்காத நீங்கள், தேர்தலில் நிற்கமட்டும் அனுமதி கேட்பது ஏன்?

வீட்டில் நுழைந்து விட்ட கள்வர்களை விரட்டுவதற்கு தந்தையிடம் அனுமதி கேட்பதற்கும், காதலித்த பெண்ணை கல்யாணம் செய்துகொள்ள தந்தையிடம் அனுமதி கேட்பதற்கும் (அவசியத்தைப் பொருத்தளவில்) வித்தியாசம் இருக்கிறதல்லவா? அதுதான் இதுவும்!

ஆத்மநாதன், சிதம்பரம்.

(?) "எங்கள் வெற்றிக்கு நாங்களேதான் காரணம். எங்கள் வெற்றியினல்தான் திராவிடக் கட்சி பெருமையடித்துக் கொள்கிறது; அந்தக் கட்சியால் நாங்கள் வெற்றி பெறவில்லை-எங்களால் அவர்கள் பெருமை பெற்ருர்கள்'' என்று இரண்டொருவர் பேசுகிருர்களே; அதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?

குவலயம் விடிவது தன்னுல்தான் என்று கோழி நினைத்துக் கொண்டிருக்குமாம்—பாவம்; கோழி புத்திக்காரர்கள்–மாட்டுச் சாணத்தை சிய்த்துப் புழுப் பொறுக்கும் போது அப்படித்தான் ஏதாவது கொக்கரிப்பார்கள். விட்டுத்தள்ளுங்கள், விபீஷணர்களை!

பரசுராமன், ஆமதாபாத்.

(?) 'ஆறுமாதக் கடுங்காவல்' என்ற புத்தகத்தில் பயத்தின் காரணமாகத்தான் கடவுள் என்ற சொல் தோன்றியது என்று எழுதியிருக்கிறதே; அது எப்படி?

'கடவுள் துணை' என்று போடுவதிலிருந்தே தெரியவில்லையா?– பயத்தால் தானே-'துணை' தேவைப்படுகிறது!

கிண்டல்பித்தன், மதுரை.

(?) எழுத்தாணியாரே! நீர் ஏன் பழைய பெயராக எழுத்தாணி என்று வைத்திருக்கிறீர்?

பித்தரே! 'ஓலை' உள்ள வரையில் 'எழுத்தாணி'யும் இருக்கும்.

(?) எழுத்தாணி இளவலே! உமது வயது என்ன?

நாலு குழந்தைகள் — நாற்பதுக்கு ஒன்பது வயது குறைவு

அன்புசாமி, சிலோன்.

(?) இலங்கையில் இந்தியர் அவதிப்படும்போது இந்தியத் தூதுவர் தேசாய் இலங்கையில் நடனமாடலாமா?

இலங்கை அரசின் போக்கை எதிர்த்து ருத்ர தாண்டவம் ஆடியிருப்பார். சிவபக்தர்கள் அல்லவா; செங்கோல் ஏந்திகள்!

(?) எப்படித்தான் திராவிடநாடு கிடைக்கும்?

தோழரே! இந்தக் கேள்விக்குப் பிறகுஒரு பெருமூச்சுவிடும். இப்படிப் பலரும் விடும் பெருமூச்சு இருக்கிறதே; அதுதான் வடநாட்டு ஏகாதிபத்யத்தை புயற்காற்றில் சிக்கிய துரும்பாக ஆக்கிப் பறக்கவிடும்.

கொழும்புக் கோமானின் கோணல் வழி

ஆத்திரபுத்திக்காரர்களுக்கு சபலம் தட்டுவதும்,சபல புத்திக்காரர்களுக்கு ஆத்திரம் மேலிரிவதும் சகஜம். அவர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டு விட்டார், இலங்கைப்பிரதமர் சர் ஜான் கொத்தலவாலை. கொழும்பு நகரில் கூடிய ஆசிய நாட்டுக் கொலுபொம்மைகள் மாநாடு வெறும் 'அரட்டைக் கச்சேரி'யாகவே முடிந்து விடுமோ என நாம் அஞ்சினேம்–இதயத்தின் ஒரு மூலையில் அரும்புவிட்ட அந்த அச்சத்தை பூக்கச் செய்து, காயாக்கி, கனியாக்கி, அழுகி துர்நாற்றம், வீசச் செய்ய முனைந்துவிட்டன பாகிஸ்தானும் இலங்கையும்! வாக்குமூலங்களுக்கு புறம்பான செயலில் ஈடுபடும் இந்த ஏகாதிபத்ய அடிவருடிகள் ஏன் ஆசிய மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும், என்ற கேள்வி ஒரு புறமிருக்க: அந்த மாநாடு சதியாலோசனை பெற்றெடுத்த திருச்(!) செல்வனே என்றுகூட எண்ண வேண்டியிருக்கிறது.

இந்தோசீனவில் அமைதி நிலவ வேண்டும், ஆசியநாடுகள் பிரச்சினையில் ஐரோப்பிய நாடுகள் தலையிடக்கூடாது என்று முடிவு கட்டிய மாநாட்டில் அங்கம் வகித்தோரில் இருவர்–அதிலும் மாநாட்டைக் கூட்டுவதற்கே மூலகாரணமாயிருந்தவர்கள் இந்தோசீன செல்லும் பிரஞ்சுப் படைகளை தங்கள் நாடுகளின் வழியாக செல்ல அனுமதியளிப்பது—மாநாட்டை அவமானப் படுத்தியதோடு மட்டுமன்றி ஆசியாவின் எதிர்காலல் வாழ்வைத் தூக்கிலிடும் துர்எண்ணமுமாகும் பாகிஸ்தானைப் பொருத்தவரை அனைவருமே எதிர்பார்த்தது தான்--ஆசிய மாநாட்டின் தீர்மானங்களில் அதற்கு நம்பிக்கையில்லையென்று! ஆனல் கொத்தலவாலை, ஏகாதிபத்தியம் என்ற 'மோகினிப் பிசாசு' தன்னை பீடித்திருப்பதை மறைக்க, மூரணன குதர்க்கவாதம் பேசுவாரென்று யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

காலனி ஆதிக்கம் ஒழிய வேண்டுமென்கிருர்; அதே நேரத்தில் பிரஞ்சுக் காலனியை ஊக்குவிக்கும்நோக்கோடு, ஆசிய மாநாட்டில் முடிவு கட்டிய தீர்மானங்களுக்கும் கொள்ளி வைக்கிருர். அதற்கு அவர் தரும் புது விளக்கம் "கம்யூனிஸ்டு ஆதிக்கத்தை எதிர்க்க பேயோடுகூட இணைந்து போரிடுவேன்'' என்பதாம்.வயதானவர்தான், பக்குவப் பட்ட உள்ளத்தினர்தான் கொத்தலவாலை – ஏடு பல கற்றிருப்பார், நாடு பல சுற்றியிருப்பார்–என்ருலும் அவர் அறிந்தாரில்லை 'பொதுவுடமை' பூக்கக் காரணமென்ன என்பதை! தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியாத ஒரு கூட்டம்—தேவைக்கு அதிகமாக வைத்திருக்கும் பிரிதொரு கூட்டம்—இந்நிலை நாட்டில் நீடித்தால் பொதுவுடமை ஏன் வளராது? பொதுவுடமை அழிக்க பேயோடுகூட இணைவாராம்—கூறுகிருர் சிங்களத்துக் கோமகன்! ஒவ்வொரு கண்டத்திலும் தனித் தனிக் காலனிகளை வசப் படுத்திக் கொண்டு கோர தாண்டவமாடும் பிரான்சுக்கு மேலும், மேலும், துணை புரிந்து கொண்டிருந்தால் பொது வுடமை வளரத்தானே செய்யும்! அனுபவ உள்ளம்—ஆனல் இந்த அரசியல் அரிச்சுவடியை கொத்தலவாலை தெரிந்து கொள்ளவில்லை—பரிதாபப் படுகிறேம்!

புருக்கூடு...

1ம்-பக்கத் தொடர்ச்சி

தியஅரசாங்கத்துக்குக் கட்டுப்பட்டதுதான் — அந்தப் புருக்கூட்டிலே திராவிடர் என்ற புருக்கள் மட்டுமல்ல — வடவர் என்ற கோழிக் குஞ்சுகளும் இருக்க வேண்டியதுதான்—புருக்கூடு என்பது கோழிகளுக்கும் சேர்த்துத்தான். என்பதுதானே பக்தவத்சலனர் தரும் விளக்கமாகும்.

புருக்கூடு கதை நடந்திருக்க முடியாது– ஏனெனில் "கோழிக்கும் சேர்த்துத்தான் புருக்கூடு'' என்று சொல்லுகிற குருட்டுமதி படைத்தோன் யாரும் இருக்கமாட்டான்—ஆனல் பக்தவத்சலம் கதை நடக்கிறது. ஏனெனில் வட நாட்டானுக்கும் தென்னுட்டானுக்கும் சேர்த்துத்தான் மத்திய சர்க்கார் என்கிருர் மதியூக மந்திரி. அவன் சப்பாத்தி சாப்பிடுகிருன் — இவன் அரிசி சாப்பிடுகிருன் —அதனுல்தான் ஊதியத்திலே பேதம் என்கிருர்கள்— உணவு பேதம் உரைக்கும் இவர்கள்-- உண்மையான இன பேதத்தை அப்போது மட்டும் மறந்துவிடுகிருர்கள்.

புருக்கூடு கதை நடந்திருக்க முடியாது—காரணம் அத்தகைய குருட்டுக் குடியானவன் இருந்திருக்கமாட்டான்–அதனல்! இந்த அரசியல் கதை நடக்கிறது— ஏனெனில் அமைச்சர் பெருந்தகையின் அருமையான விளக்கம் அந்தக் கற்பனைக் குடியானவனையும் மிஞ்சுகிறது—அதனல்!

புருக்கூடு கதை நடந்திருக்க முடியாது—ஏனெனில் புருக்கள் அத்தகைய புரட்சியில் ஈடுபட்டதாகக் கேள்விப்பட்டதில்லை;-அதனல்! இந்த அரசியல் கதை நடக்கத்தான் போகிறது; ஏனெனில் திராவிடப் புருக்கள் ஒரு நாள் விடுதலைக் கொடியேந்தி சுதந்திர கீதம் இசைக்கப் போகின்றன—அப்போது இந்தப் பக்தவத்சலங்கள் அண்ணாந்து பார்த்துக்கொண்டு நிற்கத்தான் போகிருர்கள்;-அதனல்!

'சோமு' அச்சகத்தில் அச்சிடப்பட்டு, எஸ். தியாகராசசுந்தரம் அவர்களால் வெளியிடப்பட்டது. ஆசிரியர் மு. கருணநிதி. ஜக்ரியா காலனி, கோடம்பாக்கம், சென்னை–24